# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 146/ந/2017

ஆணை எண். 207/2017

நாள் : 22/08/2017

திரு எம். குணசேகரன்,
வடுகப்பட்டி, – முறையீட்டு மனுதாரர்
சங்ககிரி – 637 301.

இயக்குநர்,
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை,
சென்னை –108. – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், சங்ககிரி வழி, வடுகப்பட்டி அஞ்சல், 21/22B எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. குணசேகரன் அவர்களது 03.07.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 04.07.2017 அன்று பெறப்பட்டு, 146/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவுடன் அனுப்பப்பட்ட ஆவங்களை பரிசீலனை செய்து கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், சங்ககிரி வழி, வடுகப்பட்டி அஞ்சல், 21/22B எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. குணசேகரன் என்பவர் நகராட்சி துப்புரவு ஆய்வர் பணியிலிருந்து 30.04.2008 அன்று பணி மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, நாமக்கல் நகராட்சி ஆணையரின் முன்மொழிவுகள் அடிப்படையில் ஓய்வூதியப் பயன்கள் திருத்தி அமைத்து 16.06.2017 நாளிட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் கடித எண். 17435/2017–ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையின்படி 01.05.2008 முதல் 31.05.2017 முடிய திருத்திய ஓய்வூதிய நிலுவைத் தொகை ரூ.8,89,546/–ஐ காசோலை மூலம் முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரருக்கு, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய ஆணை திருப்தி அளிக்காத நிலையில் 03.07.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்படி அலுவலருக்கு முறையிட்டுள்ளதுடன் இம்முறைமன்ற நடுவத்திலும் முறையீடு செய்துள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு2(11)–ன் கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் "பொதுப்பணியாளர்" என வரையறைப் படுத்தப்பட வில்லை. மேற்குறிப்பிட்ட சட்டத்தில் பொதுப்பணியாளர் என வரையறைப்படுத்தப் படாத அலுவலர் அல்லது அவர் பிறப்பித்துள்ள ஆணை குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, முறையீட்டு மனுதாரர் தனது முறையீடு குறித்து சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்கு முறையீடு செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்து இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு எம். குணசேகரன்,
துப்புரவு ஆய்வர் (ஓய்வு),
2/22 பி, வடுகப்பட்டி அஞ்சல்,
சங்ககிரி (வழி),
சேலம் மாவட்டம் – 637 301.

2. நகராட்சி ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்